**மகாவலி லைவ்ஸ்ரொக் என்டபிறைசஸ் லிமிட்டட்– 2015/2016**

-----------------------------------------------------------------------------------------------------------------

மகாவலி லைவ்ஸ்ரொக் என்டபிறைசஸ் லிமிட்டட் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

**1.4 கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

------------------------------------------------------------------------------------------------------------------

(அ) கம்பனியின் நிலையான சொத்துக்கள் குறியீடு செய்யப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு பௌதீக சொத்துக்களின் மெய்மையாய்விற்காக கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், காணப்படும் ரூபா 19,940,735 ஆன ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 3,940,179 தொகையுடைய அவற்றின்மீதான பெறுமானத்தேய்வின் துல்லியத்தன்மையினை மெய்மையாய்வுசெய்ய முடியாது காணப்பட்டது.

(ஆ) கம்பனி பௌதீக இருப்பு கணக்கெடுப்பிற்கு அழைக்காமை மற்றும் மீளாய்வு காலப்பகுதியின் இருப்பு அறிக்கை பெறப்படாததிலிருந்து பௌதீக இருப்பு கணக்கெடுப்பை அவதானிக்க முடியாது காணப்பட்டது. ஆகையினால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 32,588,479 தொகையான இருப்புக்கள் தாழ்ந்த கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ளமுடியாது காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 1,994,461 சாதகமான வங்கி மீதி மற்றும் ரூபா 626,494 மேலதிகப்பற்று மீதியினைக் கொண்டுள்ள கம்பனியினால் பேணப்பட்ட இரண்டு வங்கி கணக்குகள் தொடர்பில் வங்கி உறுதிப்படுத்தல்கள் பெறப்படவில்லை.

(ஈ) 2016 மார்ச் 31 இல் உள்ளபடியான ரூபா 79,644,860 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் துல்லியத்தன்மை மற்றும் உள்ளதன்மையினை அறிந்துகொள்வதற்கு விலைப்பட்டியல்கள், பொருள் பெறுகைக் குறிப்புக்கள் போன்ற விபரமான பட்டியல்கள் மற்றும் மூலஆவணங்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.

(உ) கம்பனி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமான வரி, பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் (என்பீரீ) திரும்பல்கள் போன்ற பண அனுப்புதல்களினை செலுத்தியிருக்கவில்லை. 2006/2007 தொடக்கம் 2015/2016 வரையான மதிப்பாண்டுகளுக்கான மொத்த நிலுவையாகவுள்ள மீதி ரூபா 24,140,168 ஆகக் காணப்பட்டது.

(ஊ) பரீட்சை மீதியில் காட்டப்பட்ட ரூபா 22,805,110 தலைமை அலுவலக கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் தொடர்புடைய நாளதுவரையாக்கப்பட்ட பேரேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 கருத்துரிமைமறுப்பு அபிப்பிராயம்

கருத்துரிமைமறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கமைய, இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், மற்றும்

- எனது அறிக்கையின் கருத்துரிமைமறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 1647 | வாகனப் பட்டியலொன்று கம்பனியினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உபகரணம் மற்றும் மென்பொருள் பதிவேடுகள் தயாரிக்கப்படவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2.2.4(உ) பிரிவு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கூட்டிணைந்த திட்டத்துடன் ஆண்டின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் இரண்டும் மீளாய்வு செய்யப்படவேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.6 ஆம் பிரிவு | காலாண்டு செயலாற்றல் அறிக்கைகள், காலாண்டு முடிவடைந்த பின்னர் 30 நாாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அறிக்கைகள் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 15,264,327 இலாபத்திற்கு எதிராக மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் ரூபா 13,256,699 நட்டமொன்றை விளைவித்திருந்தமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 28,521,026 பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,556,014 இனால் விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் ரூபா 17,038,559 இனால் விற்பனைக் கிரயம் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் இந்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு கம்பனியினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டிற்கு செயலாற்றல் அறிக்கைகள்கூட தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

ரூபா 7,680,000 தொகையான கடன்களின் மொத்த மீதி அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின்போது பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுக்கான திட்டமொன்று கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 25 மாதங்கள் தாமதமொன்றுடன் 2018 யூலை 18 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பெறுகை

அரச பெறுகை வழிகாட்டல்கள் 2006 இன் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு கம்பனியினால் பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் | | பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு முரணாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை. |
| (ஆ) | கணக்கீடு | - | காப்புக் கோவைகள் (Backup) மற்றும் கடவுச்சொல் (Password) பேணுவதற்கு தவறியமை. |
| | | - | நாளேட்டு உறுதிச்சீட்டுக்களினை தயாரிப்பதற்கு தவறியமை. |